Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 • இதழ் Issue : 62 • வியாழக்கிழமை Thursday • 01.01.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஜனவரி 6ந்தேதி அமைச்சரவைக் கூட்டம்



சென்னை : தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டம் ஜனவரி 6ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர்மு.க.ஸ்டாலின் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது. ஜனவரி 20ம் தேதி சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் தொடங்கும் நிலையில், முக்கிய ஆலோசனை நடத்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுகிறது. 2026ம் ஆண்டிற்கான தமிழக சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடா வரும் ஜன. 20ம் தேதி ஆளுநா உரையுடன் தொடங்கவுள்ளதாக பேரவைத்தலைவர் அப்பாவு தெரிவித்தார்.

இதையடுத்து ஆளுநர் உரையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்தும் இடைக்கால பட்ஜெட் தாக்கல் உள்ளிட்டவை தொடர்பாகவும் ஆலோசனை நடத்த தமிழ்நாடு அமைச்சரவை கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள் கோரிக்கை தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட உள்ளது.மேலும்ஒய்வூதியத் திட்டங்கள் தொடர்பாக ககன்தீப் சிங் பேடி குழு முதலமைச்சரிடம் அளித்த இறுதி அறிக்கை குறித்தும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்,பொதுப்பணி, எரிசக்தி உள்ளிட்ட 6 துறைகளின் சார்பில் ரூ.58,740 கோடியில் நடைபெறும் முத்திரைத் திட்டப்பணிகளை 2026 பிப்ரவரிக்குள் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று அதிகாரிகளை முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

தமிழகஅரசு செயல்படுத்தி வரும் முத்திரைத் திட்டங்கள் தொடர்பாக முதல்வர் தலைமையில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. முன்னதாக, கடந்த டிச.22-ம் தேதி 6 துறைகளைச் சேர்ந்த ரூ.87,941 கோடி மதிப்பிலான 27 முத்திரைத் திட்டங்கள் குறித்து முதல்வர் ஆய்வு செய்தார்.

இதன் தொடர்ச்சியாக, நேற்றுநடந்தகூட்டத்தில், தொழில், எரிசக்தி, சுகாதாரம், சுற்றுலா மற்றும் அறநிலையங்கள், கைத்தறி, பொதுப்பணித் துறை ஆகிய 6 துறைகளைச் சேர்ந்த ரூ.58,740 கோடி மதிப்பில் செயல்பாட்டில் உள்ள 27 முத்திரைத் திட்டங்களின் பணி குறித்து முதல்வர் கேட்டறிந்தார்.

சிவகங்கை மினி டைடல் பூங்கா பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், சூலூர் பாதுகாப்பு உபகரண உற்பத்தி பூங்கா மற்றும் ஒரகடம் மருத்துவ சாதனங்கள் பூங்கா பணிகளை 2026 ஜனவரிக்குள்ளும், கோயம்புத்தூர் பொது பொறியியல் வசதி மையப் பணிகளை பிப்ரவரிக்குள்ளும் பயன்பாட்டுக்கு கொண்டுவர முதல்வர் அறிவுறுத்தினார்.

மேலும், எரிசக்தி துறையின் கீழ், ரூ.13,077 கோடியில் நடைபெற்று வரும் உடன்குடி அனல்மின் திட்ட (அலகு I) பணிகளை ஜனவரிக்குள் முடித்து, கோடை காலத்தில் சீரான மின்விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும்.

சுகாதாரத் துறையின்கீழ் ரூ.110 கோடியில் நடைபெறும் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனைப் பணிகளை பிப்ரவரிக்குள்ளும் முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர உத்தரவிட்டார்.

இதுதவிர, நீலகிரியில் சூழல் பூங்கா அமைக்க பிப்ரவரிக்குள் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என துறை செயலர் தெரிவித்தார்.

இதுதவிர, துறைகள் சார்பிலான பிற பணிகளையும் விரைவாக முடிக்க முதல்வர் அறிவுறுத்தினார்.

இந்த கூட்டத்தில், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், மின்துறை தலைவர் ஜெ. ராதாகிருஷ்ணன், துறை செயலர்கள் மங்கத்ராம் சர்மா, பிரதீப் யாதவ், க.மணிவாசன், ப.செந்தில்குமார், வி.அருண்ராய். வே.அமுதவல்லி உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.




# அ.தி.மு.க. ஆதரவு வாக்குகளில் ஒன்று கூட விடுபடக்கூடாது மாவட்ட செயலாளர்களுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தல்



சென்னை,

தமிழகத்தில் அடுத்த ஆண்டு (2026) ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் 3 மாதங்களே இருக்கும் நிலையில் அரசியல் கட்சிகள் எல்லாம் தேர்தல் பரீட்சைக்கு தயாராகி வருகின்றன.

பிரதான எதிர்க்கட்சியான அதிமுக கூட்டணியில் தற்போது வரை பாஜக, தமாகா ஆகிய இரு கட்சிகள் மட்டுமே உள்ளன. அ.தி.மு.க.-பா.ஜனதா கூட்டணியை உறுதி செய்தபோதிலும், தொகுதி பங்கீடு குறித்து வெளிப்படையாக இரு தரப்பிலும் எதுவும் பேசவில்லை. ஆனால் இரு தரப்பிலும் சில பேச்சுவார்த்தைகள் நடந்து வந்தன.

இதற்கிடையில் அண்மையில் சென்னை வந்த தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளரும், மத்திய மந்திரியுமான பியூஷ் கோயல், எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். கூட்டணியில் தொகுதி பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தைநடைபெற்றது. இதில் வருகிற தேர்தலில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது, கூட்டணியில் மேலும் சில கட்சிகளை இணைப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது. மேலும் அ.தி.மு.க.-பா.ஜனதா மற்றும் மற்ற கட்சிகளுக்கு இடையே தொகுதி பங்கீடு இறுதியானதாகவும் தகவல் வெளியானது.

சட்டமன்ற தேர்தல் நெருங்கு நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று நடைபெற்றது. இந்த கூட்டம் அரசியல் களத்தில் முக்கிய வத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இந்த கூட்டத்தில், தேர்தல் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். மக்களை சந்தியுங்கள். கூட்டணியை நான் பார்த்துக்கொள்கிறேன். திமுக அரசு செய்யும் தவறுகளை மக்களிடம்எஸ்.ஐ.ஆர். பணிகளை கண்காணியுங்கள். அதிமுக ஆதரவு வாக்குகளில் ஒன்று கூட விடுபடக்கூடாது என மாவட்ட செயலாளர்களுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தி உள்ளார். மேலும் தொகுதி வாரியாக வெற்றி பெறக்கூடிய வேட்பாளர்களின் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

# பொங்கலுக்கு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு மட்டும் தான்



சென்னை: பொங்கல் பரிசாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு ஆகியவை வழங்குவதற்கு ரூ.248 கோடி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் வரும் ஜன.,15 பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. ஒவ்வொரு ஆண்டும், ரேசன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசாக பச்சரிசி, சர்க்கரை, கரும்பு உள்ளிட்டவை ரேசன் கடைகள் மூலம் ஏழை மக்களுக்கு வழங்கப்படும். விரைவில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளதால், பொங்கல் பரிசுடன்ரொக்கம்வழங்கப்படும் என தகவல்கள் வெளியாகி வந்தன.

இந்நிலையில், 2 கோடியே 22 லட்சம் ரேசன் கார்டுகளுக்கு பொங்கல் பரிசாக ஒரு கிலோபச்சரிசி,ஒருகிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுநீளக்கரும்புவழங்குவதற்காக ரூ. 248 கோடி ஒதுக்கீடு செய்வதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பில், ரொக்கம்தருவதுகுறித்து எந்த அறிவிப்பும் இல்லை.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தங்கம் விலை சவரன் ரூ.1 லட்சம் கீழே சென்றது; ஒரே நாளில் ரூ.960 குறைந்தது



சென்னை: சென்னையில் இன்று (டிசம்பர் 31) 22 காரட் ஆபரணதங்கத்தின் விலை சவரன் ரூ.99,840 ஆக விற்பனையானது. பெரிய முதலீட்டா ளர்கள், பாதுகாப்பு கருதி, தங்கம் மற்றும் வெள்ளி கொள்முதலில் அதிகளவில் முதலீடு செய்கின்றனர். சீனாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் வெள்ளிக்கு, அந்நாடு சமீபத்தில் கட்டுப்பாடுகளை விதித்தது. இதுபோன்ற காரணங்களால், சர்வதேச சந்தையில் தங்கம், வெள்ளி விலை உயர்ந்தது. நம் நாட்டில் அவற்றின் விலைகள் புதிய உச்சத்தை எட்டின. (டிசம்பர் 30) ஒரே நாளில் தங்கம் விலை கிராமுக்கு, 420 ரூபாய் குறைந்து, 12,600 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு, 3,360 ரூபாய் சரிவடைந்து, 1,00,800 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெள்ளி கிராமுக்கு, 23 ரூபாய் குறைந்து, 258 ரூபாய்க்கு விற்பனையானது. கிலோவுக்கு, 23,000 ரூபாய் சரிவடைந்தது, 2.58 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

இந்நிலையில், காலையில் (டிசம்பர் 31) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 400 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. கிராமுக்கு 50 ரூபாய் குறைந்து ஒரு கிராம் 12 ஆயிரத்து 550 ரூபாய்க்கு விற்பனை ஆனது. பின்னர் மாலையில் தங்கம் விலை சவரனுக்கு மேலும் ரூ.560 குறைந்து ஒரு சவரன் ரூ.99, 840 ஆக விற்கப்பட்டது. ஒருகிராம் ரூ. 12,480 ஆக உள்ளது.

## 2026ல் விஜய்யை முதல்வராக அரியணையில் ஏற்ற
# பலமடங்கு அதிக வேகத்தில் களப்பணியாற்ற உறுதி செயல் படுவோம்
### தவெக நிர்வாகி அஜிதா ஆக்னல் உறுதி



தூத்துக்குடியை சேர்ந்த தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகி அஜிதா ஆக்னல் தனக்கு மாவட்ட செயலாளர் பதவி கிடைக்காததால் கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னை பனையூரில் தவெக தலைவர் விஜய்யின் காரை வழிமறித்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். பின்னர் கட்சி மூத்த நிர்வாகிகளின் பேச்சுவார்த்தையை ஏற்று பனையூரில் இருந்து கலைந்து சென்றார்.

இந்த நிலையில் கடந்த 25-ஆம் தேதி அவர் தூத்துக்குடியில் உள்ள தனது வீட்டில் தூக்க மாத்திரைகளை அதிகமாக சாப்பிட்டு தற்கொலைக்கு முயற்சி செய்தார். குடும்பத்தினர் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதனால் உடல்நலம் தேறி சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்ட அஜிதா ஆக்னல் நேற்று பூரண குணமடைந்து வீடு திரும்பினார்.

இந்த நிலையில் அஜிதா ஆக்னல் தனது எக்ஸ் தள பக்கத்தில் ஒரு பதிவு செய்துள்ளார். அதில் கழகத் தோழர்கள் என் மீது கொண்ட பேரன்பினாலும்பிரார்த்தனைகளாலும் மட்டுமே பூரண குணமடைந்துள்ளேன். 2026-ல் விஜய்யை முதல்வராக அரியணையில் ஏற்ற பலமடங்கு அதிகவேகத்தில் களப்பணியாற்றஉறுதிகொண்டுள்ளேன். "வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு" என்று குறிப்பிட்டு ள்ளார்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்டத்திற்குட்பட்ட வாக்காளர்கள் அனைவரும் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவது குறித்து மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.அழகுமீனா, IAS அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. ஸ்டாலின், ,IPS முன்னிலையில் அரசு வாகனங்களில் ஒட்டு வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.



தியாகிவிஸ்வநாததாஸ்அவர்களின்நினைவுதினத்தைமுன்னிட்டுஇன்று(31.12.2025) மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவு இல்லத்தில் உள்ள அன்னாரது திருஉருவச் சிலைக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.அன்பழகன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இ.சாலி தளபதி உடன் உள்ளார்.

## தூத்துக்குடி மாநகராட்சியில் மாதாந்திர சாதாரண கூட்டத்தில் அதிமுக சார்பாக மாமன்ற உறுப்பினர் மந்திரமூர்த்தி பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினார்



தூத்துக்குடி மாநகராட்சி மாதாந்திர சாதாரணகூட்டத்தில் அதிமுக கவுன்சிலர் மந்திரமூர்த்தி அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து பேசுகையில்: பத்திரிக்கையாளர்களின் கோரிக்கையான இலவச வீட்டு மனை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் தொடர்ந்து அவர் பேசுகையில் கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், போன்ற யு.பி.எஸ்.சி, தேர்வு பயிற்சி இலவசமாக வழங்கப்படுகிறது அதை மீண்டும் பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் மேலும் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழி வி.வி.டி சிக்னலில் இருந்து செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது ஆகவே மருத்துவமனை அருகில் உள்ள பூங்காமற்றும்நீதிமன்றம் பகுதி வழியாக அதற்கு மாற்றுப் பாதை ஒன்று அமைத்து பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் விரைந்து சொல்வதற்கு பொதுமக்கள் நலன் கருதி அதை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிமுகசார்பாகவலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம் என்று அதிமுக எதிர்க்கட்சி கொறடாவும் 51வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் மந்தரமூர்த்தி தெரிவித்தார்.

## திமுக இளைஞரணி நிர்வாகி நாகராஜ் பிறந்தநாளை முன்னிட்டு தங்கத்தேர் இழுத்து தனது பிறந்தநாளை கொண்டாடினார்
### திவான் ஒலி பங்கேற்பு





தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் பண்பொழியைச் சார்ந்த திமுக இளைஞரணி நிர்வாகியான நாகராஜ் தனது பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் வல்லம் திவான் ஒலி அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். பின்னர் புதூர் பகுதியில் அமைந்துள்ள குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு இனிப்புகள் மற்றும் புத்தாடைகள் வழங்கிகுழந்தைகள் முன்பாக பிறந்த நாள் கேக் வெட்டி கொண்டாடினார். அதனை அடுத்து இரவு 7 மணி அளவில் தென்காசி மாவட்டம் பிரசித்தி பெற்ற பண்பொழி அருள்மிகு திருமலை குமாரசாமி கோவிலில் உள்ள தங்கத் தேரினை குடும்பத்தா ரோடு இணைந்து தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் வல்லம் திவான் ஒலி துவக்கிவைத்துதேரினை வடம் பிடித்து இழுத்தார். இந்நிகழ்ச்சியில் பண்பொழியை சார்ந்த இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பக்ருதீன் பாவா என்ற வலசை அமின், திருமலை கோயில் அறங்காவலர் குழு உறுப்பினர் எம் எஸ் இசக்கி, பாப்பா, இளைஞர் அணி நிர்வாகிகள் ராசு கண்ணன், முத்து, புதூர் மாரி உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## மதுராந்தகம் அருகே S.R.M வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு இலவச பயிற்சி





செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன்பேட்டையில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்., வேளாண் அறிவியல் கல்லூரியை சேர்ந்த நீலா முகர்ஜி குழு மாணவிகள் (R. தீபிகா, A.ஜனனி, S.A.அனுஜா, S.சுகந்திரா, வர்ஷினி .K, M.சண்முகப்பிரியா, R.சிவசங்கரி, P.புவனேஸ்வரி, S.நந்தினி, T.பிரேமா)கிராம வேளாண் பணி அனுபவத்திட்டத்தின் ஒருப்பகுதியாக, கல்லூரி முதல்வர் முனைவர் M. ஜவஹர்லால், உதவி பேராசிரியர்கள் வேளாண் விரிவாக்க துறை(முனைவர் R.ராஜசேகரன், முனைவர் M.R.நவீன் குமார்,முனைவர் A. முகமது இக்ஷானுல்லா, முனைவர் T. குங்கும செல்வன், முனைவர் சுஷ்மிதா )மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர். A. இந்துஶ்ரீ அவர்களின் வழிகாட்டுதலின்படி

மதுராந்தகம் அடுத்த அருங்குணம் கிராமத்தில் விவசாயிகளுக்கான இலவச வேளாண் பயிற்சியை வழங்கினர்.

இந்த பயிற்சியில் எஸ் ஆர் எம் மாணவிகள் விவசாயிகளுக்கு பல்வேறு பயனுள்ள தகவல்களை வழங்கினர்.

மேலும், முனைவர் மெல்வின் ஜோ அவர்கள் அசோலா மற்றும் நீல பச்சை பாசி உற்பத்தி குறித்து விளக்கமளித்தார்.

விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சி விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.



தென்காசி மேற்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவரும் சுரண்டை மார்க்கெட் வியாபார சங்கத் தலைவருமான ஏ. கே. எஸ். சேர்ம செல்வம் தென்காசி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட சென்னை சத்தியமூர்த்தி பவனில் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☏ +919444082959



## தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக சிலம்பரசன் நியமனம்

தமிழகம் முவதும் 70 ஐ.பி.எஸ். அதிகாரிகளை அதிரடியாக பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி தூத்துக்குடி மாவட்ட எஸ்பியாக பணியாற்றி வந்த ஆல்பர்ட் ஜான் மாற்றப்பட்டு, நெல்லை மாவட்ட எஸ்பியாக பணியாற்றி வரும் சிலம்பரசன் தூத்துக்குடி மாவட்ட எஸ்பியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



தென்காசி மாவட்ட புதிய காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள.G.S.மாதவன். இவர் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணிபுரிகிறார்

## தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சியில்
# மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டத்தை துவக்கி கலெக்டர் கமல் கிஷோர் தொடங்கி வைத்தார்

தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி எல்கைக்குட்பட்ட ஆத்துவழி குளத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே கமல்கிஷோர், இ.ஆ.ப.,அவர்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டத்தினை துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

உற்பத்தியினை அதிகரிக்கும் விதமாக 5000 ஹெக்டேர் அளவிலான பஞ்சாயத்து குளங்களில் ஒரு ஹெக்டேருக்கு 2000 மீன் குஞ்சுகள் வீதம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படவுள்ளது. அதாவது 400 ஹெக்டேரில் 8 இலட்சம் மீன் விரலிகள் இருப்பு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில்,தென்காசி மாவட்டத்திற்குட்பட்ட வாசுதேவநல்லூர் மற்றும் சங்கரன்கோவில் பகுதியில் உள்ள 400 ஹெக்டேர் அளவிலான ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள குளங்கள் தேர்வு செய்யப்பட்டு மீன் விரலிகள் இருப்புசெய்யப்படும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை (மண்டலம்) தூத்துக்குடி,இணைஇயக்குநர் திரு.இளம்வழுதி, திருநெல்வேலி, உதவி இயக்குநர், திரு.ப.மோகன்ராஜ், (தென்காசி), ஆய்வாளர், திரு.சு.பாலமுருகன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புத்தாண்டு சபதமாய் மரம் வளர்ப்போம் மாசில்லா உலகம் படைப்போம்...

# விருதுக்கே பெருமை சேர்க்கும் வீரர்... ஒரு லட்சம் மரக்கன்று நட்ட முனைவர் அர்ஜுனன்



ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும் பொழுது கடந்த ஆண்டு நாம் என்ன செய்தோம் இந்த ஆண்டில் என்ன செய்யப் போகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என பெரியவர்கள் சொல்வார்கள் அந்த சொல்லுக்கு அர்த்தம் தேடித் தந்தவர் அர்ஜுனன்.... தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி குமந்தா புரத்தைச் சார்ந்தவர் கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றவர் இவரது துணைவியார் பள்ளி ஆசிரியை இவர்கள் இந்த பூமியில் பிறந்த நாம் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற லட்சிய வெறியோடு கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக அரசு பணியோடு சேர்ந்து தன்னலம் கருதாது பொதுநலம் வேண்டி செல்லும் இடமெல்லாம் மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர் பின் ஒரு காலத்தில் இந்த மரக்கன்றுகளும் அர்ச்சுனன் பெயர் சொல்லும் அளவிற்கு பசுமை திட்ட நாயகனாக பவனி வருகிறார் முனைவர் அர்ஜுனன் வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் சுழற் கழகம் அரிமா சங்கம் சமூக ஆர்வலர்களின் அர்ப்பணிப்பு அரசு ஊழியர் சங்கம் என எந்த அமைப்புகளும் ஆண்டு விழா பிரிவு உபச்சார விழா பதவியேற்பு விழா நடத்துகிறது என்றால் அங்கே அர்ச்சுனன் மட்டும் கௌரவிக்கப்படுவார் இந்த கௌரவத்திற்கு காரணம் அவர் மரக்கன்று நடு

வதன் மூலம் என்பதை உணர்ந்து செய்திக்காக அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் அர்ஜுனரை கண்டோம்... அர்ச்சுனனும் எந்தவித ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக குளத்தங்கரை ஓரத்தில் குழிகள் தோண்டிக்கொண்டிருந்தார் அவரிடம் நம்மை அறிமுகப்படுத்திக் கொண்டோம் கையில் வைத்திருந்த பிளாஸ்கில் இருந்த காபியை நமக்கும் ஒருகப் கொடுத்தார் இந்த குளத்து கரையில் நான் கொண்டுவரும் காபி தான் உங்களுக்கும் சோம பானம் என்றார் சரி என்று நாமும் அவர் கொடுத்த காபியை அருந்திவிட்டு மரக்கன்று நடும் மாயம் தான் என்ன கேட்டோம்? மற்றும் மன அழுத்தத்தைக் குறைத்து மன ஆரோக்கியத்தை மேம்படுத்து கிற மன ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது சுற்றுப்புத்தை அழகாகவும் அமைதியாகவும் ஆக்குகிறது மரம் நடுதல் என்பது குழந்தைகளுக்கு இயற்கையின் முக்கிய த்துவத்தை பற்றி கற்பிக்கப்படும் ஒரு நல்ல வாய்ப்பாகவும் இருக்கிறது சரியான இடத்தில் அப்பகுதிக்கு ஏற்ற மரக்கன்றுகளை தேர்ந்தெடுக்க வேண்டும் எடுத்துக்காட்டாக வேப்ப மரம் மகிழம் மாமரம் காடாக இருந்தால் கவனமாக கையாள வேண்டும் பெரும் எண்ணிக்கைக்காக அதிகரிக்காமல் அறிவியல் பூர்வமாக செய்வது அவசியம் எந்த பகுதிக்கு எந்த மரம் பிடிக்கும் என்று ஆராய்ந்து நட வேண்டும் இதன் மூலம்

மரங்கள் நிறைந்த நிலங்களின் மதிப்பு அதிகரிக்கிறது.என ஒரு மிகப்பெரிய பாடத்தை நமக்கு அறிவித்தார் மரம் நடுதல் என்பது சில அரசியல்வாதிகளுக்கு போட்டோ எடுக்கவும் பத்திரிக்கையில் படம்பிடிப்பதற்காக மட்டும் பயன்படும் ஆனால் இவரைப் போன்ற நல் உள்ளம் படைத்தவர்களால் மரம் நடுதல் ஒரு கலையாக வாழும் தலைமுறைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது எத்தனை விருதுகள் சுமார் 100க்கும் மேற்பட்ட விருதுகள் பல்வேறு அமைப்புகள் மூலம் அவர் கவுரவ வைக்கப்படுகிறார் கடையநல்லூர் தென்காசி இவரது பெயர் சொல்லும் மரங்கள் மக்களுக்கு நலம் தரும் நிழல் தரும் ஒருபடிப்பினையை எதிர்கால தலைமுறைக்கு சொல்லித் தரும் விருதுக்கே பெருமை சேர்க்கும் விதமாக முனைவர் பட்டம் பெற்றார். விபீஷணன் மகாபாரத அர்ச்சுனனை போன்று இந்த மாமன்னன் அர்ஜுனன் மக்களின் மனம் கவர்ந்த கள்வனாக இந்த மண்ணில் வலம் வந்து கொண்டிருக்கிறார் நமது இதழ் சார்பாகவும் அவருக்கு வாசகர்கள் சார்பாகவும் இந்த ஆண்டிலாவது அவரைப் பின்பற்றி அவரைப்போல் அல்லாமல் உன்னால் முடிந்தவரை இருபதோ அல்லது 200மரங்களை நடுவோம் மாசில்லா உலகம் படைப்போம் இந்த உறுதி மொழியை ஏற்று அனைவரும் புத்தாண்டு சபதம் ஏற்போம்





ஈரோடு கோட்டை அருள்மிகு ஶ்ரீ கஸ்தூரி அரங்கநாதர் கோயிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சொர்க்கவாசல் திறப்பு வைபவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. (30.12.2025) அன்று அதிகாலை 3 மணியளவில் கஸ்தூரி அரங்கநாதருக்கு திருமஞ்சனமும், தீபாராதனையும், சிறப்பு வழிபாடும் நடைபெற்றது. அதனை தொடர்ந்து, அதிகாலை 4.50 மணியளவில் சொர்க்க வாசல் திறப்பு நிகழ்வு நடைபெற்றது.பிறகு சுவாமி திருவீதி உலாவும் நடைபெற்றது. 30.12.2025 அன்று அதிகாலை முதலே கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் நீண்ட வரிசையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோயிலில் காத்திருந்து சொர்க்க வாசல் திறக்கப்பட்டதும் கோவிந்தா கோவிந்தா என்று பக்தி முழக்கத்துடன் சொர்க்க வாசல் வழியாக சென்று கஸ்தூரி அரங்கநாதரை தரிசனம் செய்தனர்.இவ்விழாவில் அறங்காவல் குழு தலைவர் கர்சிப் சுப்ரமணியம் அறங்காவலர் உறுப்பினர்கள் சுந்தர்ராஜ் ராணி குமரேசன், ஹரிஹரன் ,ராவணன் மற்றும் மற்றும் முன்னாள் மாமன்ற உறுப்பினர் விஜய் பாஸ்கர் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பகலிலும் பனிபொழிவு அதிகரித்து காணப்பட்டது..







வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளரும், ஈரோடு பாராளுமன்ற காங்கிரஸ் வார் ரூம் ஒருங்கிணைப்பாளருமான வழக்கறிஞர் சி.எம். ராஜேந்திரன் 30.12 .2025 அன்று ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் தனது விருப்ப மனுவை கொடுத்து வாழ்த்துகளை பெற்றார், இதேபோல ஈரோடு மாவட்டம் பவானிசாகர் தனி சட்டமன்ற தொகுதிக்கு ஈரோடு மாவட்டம் பாசூர் பேரூராட்சி கவுன்சிலரும் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளருமான இரா கனகராஜன் தனது விருப்ப மனுவை கொடுத்து வாழ்த்துகளைப் பெற்றார், இதே போல ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் ராஜாஜிபுரம் சிவா பவானிசாகர் சட்டமன்றத் தனி தொகுதிக்கு தனது விருப்ப மனுவை கொடுத்து வாழ்த்துக்களை பெற்றார் அருகில் தமிழ்நாடு காங்கிரஸ் சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினரும் ஈரோடு மாவட்டத்தின் மூத்த வழக்கறிஞருமான ஓ எம் ஆர் பழனிவேலு, ஒன்றாம் மண்டல தலைவர் மாமரத்து பாளையம் எஸ் கோபி ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் வி கே சச்சிதானந்தம், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சேவா தளம் மாவட்ட துணை தலைவர் ராஜாஜிபுரம் பி. குமரேசன் மற்றும் குமார் ஆகியோர் உடன் இருந்து வாழ்த்தினார்கள்.





ஈரோடு மாநகராட்சி மாமன்ற டிசம்பர் மாதத்திற்கான கூட்டத்தொடர் மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் மேயர் நாகரத்தினம் தலைமையில் மாநகராட்சி மாமன்ற கூட்டம் நடைபெற்றது. அதில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அதிமுக கவுன்சிலர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, மாமன்ற எதிர்கட்சி தலைவர் தங்கமுத்து தலைமையில் சொத்துவரி குறைப்பிற்கு எந்தவித நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும், கனி ராவுத்தர் குளம் அருகில் புதிய பஸ் நிலையம் அமைப்பதாக கூறி இரண்டு வருடங்கள் ஆகியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததை கண்டித்தும் அதிமுகவினர் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.





ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் முன்னிலையில் நேற்று (30.12.2025) மாநகராட்சி கூட்ட அரங்கில் மாநகராட்சி பொறியாளர்கள் உடனான கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன் மாநகர பொறியாளர் கோ.முருகேசன் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.





டிசம்பர் மாதத்திற்கான மாமன்றக் கூட்டம் ஈரோடு மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் நேற்று (31.12.2025) நடைபெற்றது.இக்கூட்டத்திற்கு ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வே. செல்வராஜ் , மண்டல தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட மாநகராட்சி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## காரைக்குடி சுப்ரீம் அரிமா சங்கத்தின் சார்பில் வட்டாரம் 8ன் 2வது வட்டார கூட்டம் நடைபெற்றது



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சுப்ரீம் அரிமா சங்கத்தின் சார்பில் மாவட்டம் 3242 B டிக் டாக் மண்டலம், வட்டாரம் 8-ன் இரண்டாவது வட்டார ஆலோசனைக் கூட்டம் காரைக்குடி ஏ.எஸ்.எஸ் அலுவலகத்தில் காரைக்குடி சுப்ரீம் அரிமா சங்கத்தின் தலைவர் லயன் அருண்போஸ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இதில் வட்டாரத் தலைவர் லயன் ஜெகநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைச்சரவை கூடுதல் செயலாளர் லயன் டாக்டர் பி.ஆர்.மருதப்பன்,மண்டலத் தலைவர் பி.எம்.ஜே.எப் லயன் ஆர்.அழகுசுந்தரம்,முன்னாள் வட்டார தலைவர் லயன் மு.தனுஷ்கோடி, சுப்ரீம் சங்கத்தின் அட்மின் எம்.ஜே.எப் லயன் பாப்பாத்தி எம்.கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மேலும் இந்நிகழ்வில் வட்டாரம் 8-யை சேர்ந்த சங்கங்கள்,தேவகோட்டை லயன் சங்கம்,காரைக்குடி ஸ்டார் லயன் சங்கம், காரைக்குடி வெற்றி லயன்ஸ் சங்கங்களின் நிர்வாகிகள், மூத்த அரிமாக்கள் லயன் செல்லையா, லயன் இராமையா ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் நிறைவாக சுப்ரீம் அரிமா சங்கத்தின் செயலாளர் லயன் ஏ.ஆர்.எஸ்.பாண்டியன் நன்றியுரை ஆற்றினார்.

## மானாமதுரை பேருந்து நிலையத்தில் அரசு பேருந்துகளில் "தமிழ்நாடு" என்ற ஸ்டிக்கர் ஒட்டிய நாதகவினர்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் மானாமதுரை நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழகம் முழுவதும் அரசு போக்குவரத்து கழகத்தில் இயங்கும் அனைத்து பேருந்துகளிலும் "தமிழ்நாடு" என்ற வார்த்தை ஸ்டிக்கராக ஒட்டப்படாமல், அச்சிடப்படாமல் தவிர்ப்பதை கண்டிக்கும் விதமாக,"தமிழ்நாடு" என்று அச்சிடப்பட்ட ஸ்டிக்கர்களை பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் அனைத்து அரசு பேருந்துகளிலும் ஒட்டி நூதன முறையில் தங்களது எதிர்ப்பை தமிழ்நாடு அரசிற்கு வெளிப்படுத்தினார். தமிழகம் முழுவதும் நாம் தமிழர் கட்சியினர் தமிழ்நாடு என்ற ஸ்டிக்கர்களை அரசு பேருந்துகளில் ஒட்டி வருகின்றனர்.சில இடங்களில் நாககவினரை போலீஸார் கைது செய்யப்பட்ட நிலையிலும், மானாமதுரையிலும் நாதகவினர் தமிழ்நாடு என்ற ஸ்டிக்கரை பேருந்துகளில் ஒட்டினர்.இந்நிகழ்வில் மானாமதுரை ஒன்றிய நகர பேரூர் ஊராட்சி மற்றும் கிளைகளை சேர்ந்த நாம் தமிழர் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### 16 மாவட்டங்களைச் சேர்ந்த 4,824 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு

# தலா 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 6,890 டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகளை துணை முதலமைச்சர் உதயநிதி வழங்கினார்



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் (30.12.2025) அன்று ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் அரியலூர், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், இராமநாதபுரம், நீலகிரி, திருவாரூர், தூத்துக்குடி, திருச்சிரா ப்பள்ளி, திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய 16 மாவட்டங்களைச் சேர்ந்த 4,824 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலா 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 6,890 டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணதொகுப்புகளை வழங்கினார். இந்நிகழ்வில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர். ப. செல்வராஜ், கே.இ. பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி , மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி, துணை மேயர் வே.செல்வராஜ், ஆணையாளர் அர்பித் ஜெயின், ஜிம்னாஸ்டிக் வீராங்கனை செல்வி சினேகா, தடகள வீராங்கனை செல்வி நித்யா ராமராஜ், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின்பிரதிநிதிகள் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் (30.12.2025) அன்று ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் அரியலூர், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், இராமநாதபுரம், நீலகிரி, திருவாரூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய 16 மாவட்டங்களைச் சேர்ந்த 4,824 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலா 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 6,890 டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகளை கொண்டு செல்லும் வாகனங்களைகொடியசைத்துவழியனுப்பிவைத்தார். இந்நிகழ்வில் வீட்டுவசதி, மதுவிலக்குமற்றும்ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர்.ப.செல்வராஜ், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி , மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி, துணை மேயர் வே.செல்வராஜ், ஆணையாளர் அர்பித் ஜெயின், ஜிம்னாஸ்டிக் வீராங்கனை செல்வி சினேகா, தடகள வீராங்கனை செல்வி நித்யா ராமராஜ், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்



ஈரோடு மாநகராட்சியில் நேற்று (31.12.2025)நடைபெற்ற மாநகராட்சி கூட்டத்திற்கு பின், 2026 ஆம் ஆண்டு புத்தாண்டை முன்னிட்டு, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் , மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வே.செல்வராஜ் அவர்கள் மாநகராட்சி அலுவலர்களுடன் மாநகராட்சி கூட்ட அரங்கில் கேக் வெட்டி புத்தாண்டை வரவேற்றனர். இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் கு.தனலட்சுமி , மாநகரப் பொறியாளர் கோ.முருகேசன் , மாநகர நல அலுவலர் மரு.ம.கார்த்திகேயன் , மண்டல குழு தலைவர் ப.க.பழனிசாமி உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# மொடக்குறிச்சி வட்டம், கணபதிபாளையம், பகுதியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை ஆய்வு செய்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம் 02.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தினால் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 27 மற்றும் 28-வது மருத்துவ முகாம் நேற்று 31.12.2025 மொடக்குறிச்சி வட்டம், கணபதிபாளையம், அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பவானிசாகர், நல்லூர், எஸ்.ஆர்.சி. மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற்றது.

இம்மருத்துவ முகாம்களில் 34 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 20 மருத்துவர்கள் என மொத்தம் 54 மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார்கள். இம்முகாம்களில்கலந்து கொள்ளும் அனைவருக்கும் கண் பரிசோதனை, பல் சிகிச்சை, ரத்தப்பரிசோதனை, ECG, X-RAY பரிசோதனைகளும் கூடுதலாக பெண்களுக்கு கர்ப்பப்பைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் செய்யப்பட்டது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கி, மேல் சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிறப்பு மருத்துவர்களை கொண்டு பரிசோதனை செய்து ECHO போன்ற உயர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு.

உயர் சிகிச்சை தேவைப்படுவோர் பரிந்துரை செய்யப்பட்டார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 26 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது. இந்த முகாம்களில் 34,654 பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டது. 19,975 நபர்களுக்கும் ECG-ம், 22,914 நபர்களுக்கும் ஆய்வக பரிசோதனையும் 2,297 நபர்களுக்கும் X-RAYம், 2,115 நபர்களுக்கும் Scan-ம், 2,603 நபர்களுக்கும் ECHO-ம், முதலமைச்சரின் காப்பீட்டுத்திட்ட அடையாள அட்டை 740 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மொடக்குறிச்சி வட்டம். கணபதிபாளையம், அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு 20 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களும், 5 காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து மாவு மற்றும் மருந்து பெட்டகங்களும், 5 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை, 7 நபர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துப் பெட்டகங்களும் என 37 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும்துறைசார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய முற்போக்கு திராவிட கழகம் நடத்தும் ஜனவரி 9 மக்கள் உரிமை மீட்பு மாநாடு 2.0



கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகில் பாசாரில்நடைபெறுகிறது கழகப் பொதுச்செயலாளர் மக்கள் தலைவி திருமதி அண்ணியார் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது இந்த மாநாட்டுக்காக கழக நிர்வாகிகள் தொண்டர்களை பொதுமக்களை அழைத்து வருமாறு திருக்கோவிலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்விழுப்புரம்மாவட்ட கழகச் செயலாளர் எல் வெங்கடேசன் அவர்கள் வழிகாட்டுதல்படி கள்ளக்குறிச்சிமாவட்டகழக செயலாளர் எஸ் எஸ் கருணாகரன் அவர்கள் ஆணைப்படி ரிஷிவந்தியம் தொகுதி பொறுப்பாளர்

ஏ.கருணாகரன் அவர்கள் ஆலோசனைப்படி ஒன்றிய கழக துணைச் செயலாளர் எஸ் மின்னல் மணிகண்டன் அவர்கள் ஏற்பாட்டில் திருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் திருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் திருப்பாலபந்தல் ஊராட்சி கழக நிர்வாகிகள் தொண்டர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது இந்த கூட்டத்தில் வரவேற்புரை கிளை கழக செயலாளர்கள் மணிகண்டன் துரை ஊராட்சி கழக செயலாளர் சபரி முன்னிலை மாவட்ட கழகத் துணைச் செயலாளர்

V.தவமணி வெங்கடேசன் வகித்தனர்

மாவட்ட வழக்கறிஞர் துணைச்செயலாளர் எம் ஜி ஆர் ராஜு மாவட்ட நெசவாளர்அணிதுணை செயலாளர்கேசடையன் ஒன்றிய கழக அவைத் தலைவர் ஜி நடராஜ் ஒன்றிய கழகப் பொருளாளர் ஆர் அருள்மணி ஒன்றிய கழக துணை செயலாளர்எம்எரமேஷ் மாவட்ட பிரதிநிதிகள் ஹரிகிருஷ்ணன் சிவக்குமார் ஒன்றிய இளைஞரணி செயலாளர் இ எம்தாஸ்ஒன்றியமாணவரணி செயலாளர் வரதராஜ் ஒன்றிய வர்த்தக அணி செயலாளர் ஏ.ஜி அன்பழகன் ஒன்றிய கழக நிர்வாகி ஐயப்பன் மற்றும் திருப்பாலபந்தல் கிளை கழக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்



தமிழகம் முழுவதும் உள்ள பெருமாள் கோவில்கள் மற்றும் அனைத்து வைணவ திருத்தலங்களில் சொர்க்கவாசல் திறப்புநிகழ்வுநடைபெற்றுவரும்நிலையில், சிவகங்கைமாவட்டம்மானாமதுரைஸ்ரீவீரஅழகர்சமேத ஸ்ரீசௌந்தரவல்லி தாயார்திருக்கோவிலில் விசுவாவசு வருடம் மார்கழி 15ஆம் தேதி வளர்பிறை ஏகாதசி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணி அளவில் (பரமபத வாசல்) சொர்க்கவாசல் திறப்பு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மானாமதுரை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த பக்தகோடி பெருமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தேவகோட்டையில் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட மாநாடு



தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத்தின் 18 ஆவது மாநாடு தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் நடைபெற்றது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் கவிஞர் தமிழ்க்கனல் அறிவியல் பாடல் பாடினார். கல்லூரியின் முதல்வர் அருள்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் மாநாட்டை தொடக்கி வைத்து பேருரையாற்றினார்.

ஆசிரியர்களுக்கு துளிர் சேவை விருது வழங்கி சிறப்பித்தார். தேவகோட்டை நகர் மன்ற துணைத் தலைவர் ரமேஷ் வாழ்த்துரை வழங்கினார். தேவகோட்டை கிளைச் செயலாளர் கார்த்திகேயராஜா நன்றி கூறினார்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற பிரதிநிதிகள் மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் மாவட்டத் துணைத் தலைவர் பாபா அமீர் பாதுஷா கூட்டு தலைமை ஏற்றனர். மாவட்டத் துணைத் தலைவர் எட்வின் துணைச் செயலாளர் குழந்தை ஆரோக்கியமேரி முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயற்குழு உறுப்பினர் முத்து ராமசாமி வரவேற்புரையாற்றினார். இந்த வருடம் அதிகமான மாணவ மாணவிகளை துளிர் திறனறிதல் தேர்வில் பங்குபெற செய்த பள்ளிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. மாவட்டச்செயலாளர் ஆரோக்கியசாமி செயல் அறிக்கையை சமர்ப்பித்தார். மாவட்டப் பொருளாளர் பிரபு வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். அறிக்கை மீதான விவாதங்கள் நடைபெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கிளை நிர்வாகிகள் சையது மணவாளன் கிருஷ்ணவேணி டென்சிங் அருள்ராஜ் மெஹர் பானு ஜெயப்பிரியா நாகரத்தினம் சித்திரைச்செல்வி சத்தியமூர்த்தி தமிழரசன் கிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட புதிய தலைவராக ஆரோக்கியசாமி செயலாளராக பிரபு பொருளாளராக சாஸ்தாசுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். துணைத்தலைவர்களாக கோபிநாத் ஜீவானந்தம் பாபா அமீர் பாதுஷா சகாய ஜோசப் சேவியர் சேவற்கொடியோன் ராசு ஆகியோரும் துணைச் செயலாளர்களாக ஆரோக்கியமேரி முத்து இராமசாமி பாலகிருஷ்ணன் முருகானந்தம் சித்ரா ஆகியோர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய நிர்வாகிகள் பட்டியலை மாநில செயலாளர் முத்துலட்சுமி வாசித்தார். காளையார்கோவில் கிளைச் செயலாளர் அலெக்ஸாண்டர் துரை நன்றியுரை ஆற்றினார். வானவில் மன்ற கருத்தாளர்கள் ஆசிரியர்கள் லதாசுமதி காந்திமதி சாந்திவிநாயகம் அன்பரசன் ஜீவானந்தம் போஸ் ராஜேந்திரன் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில, பறவைகள் இளைப்பாற வசதியாக, குட்டி தீவு போல் மாற்றியுள்ளது வனத்துறை

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.